புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்


• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜனவரி 25, 2024 • புரட்சி 24 • முழக்கம் 02 • விலை ரூ.3.00

# பிரதமர் ஆனவுடன் மோடி செய்த சதி அம்பலப்படுத்திய முன்னாள் அதிகாரி

குஜராத் மாநிலத்தின் முதல்வராக 3 முறை பதவி வகித்த பிரதமர் மோடி, அப்போதெல்லாம் ஜி.எஸ்.டி கூடாது, அது மாநில உரிமையைப் பறிக்கும் செயல் என்றார். ஒன்றிய அரசு மாநிலங்களுக்கான உரிமைகளை நசுக்கக்கூடாது, மாநில அரசுகளுக்கு உரிய நிதியை கொடுக்க வேண்டும் என்றெல்லாம் பலமுறைப் பேசியிருக்கிறார். 2014 நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் கூட, ஆட்சிக்கு வந்தால் மாநிலங்களுக்கு அதிக உரிமை வழங்குவோம் என்று மேடைக்கு மேடை முழங்கினார். அப்பேர்ப்பட்ட மாநில உரிமைப் போராளியாக தன்னைக் காட்டிக்கொண்ட நரேந்திர மோடி, ஆட்சிக்கு வந்தவுடன் சத்தமில்லாமல், பின்வாசல் வழியாக செய்ய முயன்ற காரியங்கள் அம்பலமாகியிருக்கின்றன.

மாநிலங்களுக்கு நிதியை பகிர்ந்தளிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு நிதிக்குழு. தன்னாட்சி அதிகாரம் கொண்ட இந்த அமைப்பை, ஒன்றிய அரசு கடந்த 9 ஆண்டுகளாக கையாளும் விதம் பலமுறை சர்ச்சைகளுக்கு உள்ளாகியிருக்கிறது. வளர்ந்த தென் மாநிலங்களுக்கான வருவாய் பங்கீட்டைக் குறைக்கும் விதமாக பரிந்துரைகளை நிதிக்குழு வழங்க, ஒன்றிய அரசின் தலையீடுதான் காரணம் என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து எழுந்துகொண்டே இருக்கின்றன.

மாநில உரிமைகளை நசுக்கும் இத்தகைய முயற்சிகளை நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த நாள்முதலே தொடங்கிவிட்டார் என்ற செய்திகள் தற்போது வெளியாகியிருக்கின்றன. 2014-இல் மோடி பிரதமரான பிறகு மாநிலங்களுக்கான நிதியை பெருமளவு குறைக்க வேண்டுமென நிதிக்குழுவுடன் ரகசியமாக பேச்சுவார்த்தை நடத்தினார் என்று சர்வதேச ஊடகமான அல்ஜசீரா ஜனவரி 18-ஆம் தேதி செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. அப்போது பிரதமர் அலுவலகத்தில் இணை செயலாளராக இருந்த பி.வி.ஆர்.சுப்பிரமணியம் இதுதொடர்பாக



முக்கியமான தகவல்களை அந்த ஊடக நிறுவனத்திடம் பகிர்ந்துள்ளார்.

அன்றைய நிதிக்குழு தலைவர் ஒய்.வி.ரெட்டியுடன் பிரதமர் மற்றும் நிதி ஆயோக் தலைமை நிர்வாகி பி.வி.எம். சுப்ரமணியன் சுமார் 2 மணி நேரம் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றனர். அப்போதே ஒய்.வி.ரெட்டி பிரதமரின் கோரிக்கையை ஏற்க மறுத்திருக்கிறார். நிதிக்குழு உறுதியாக இருந்ததால், மோடி அரசு அடுத்த 48 மணி நேரத்தில் தாக்கல் செய்த முதல் பட்ஜெட்டில், பல்வேறு நலத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்துவிட்டது என்று பி.வி.ஆர்.சுப்ரமணியம் குற்றம்சாட்டியுள்ளார். நிதிக்குழுவிடம் ரகசிய பேச்சுவார்த்தை நடத்திய நரேந்திர மோடி, நாடாளுமன்றத்தில் நிதிக்குழு பரிந்துரைகளை வரவேற்பதாக பாராட்டியிருப்பதையும் அல்ஜசீரா சுட்டிக்காட்டியுள்ளது.

சுப்பிரமணியம் அப்போது நிதிக்குழு தலைவராக இருந்த ஒய்.வி.ரெட்டியுடன் பேசியதாகவும் கூறியுள்ளார். அதுமட்டுமல்லாமல், "பல்வேறு உண்மைகளை பல கட்டங்களாக மூடி மறைத்த பிறகே பட்ஜெட் வெளியிடப்படுகிறது. இந்திய அரசின் வரவு, செலவு கணக்குகள் வெளிப்படையாக இருந்தால் அரசின் உண்மையான நிதி நிலைமை தெரிந்துவிடும். நிதிக்குழுவும் ஏற்க மறுத்ததால் வேறு வழியின்றி மாநிலங்களுக்கு 42% பங்கை அளிக்க வேண்டும் என்ற முடிவை அரசு ஏற்றது" என்றும் பி.வி.ஆர்.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். நிதிக்குழு பரிந்துரைகளை ஒன்றிய அரசு ஏற்க மறுத்ததை நாடாளுமன்றத்திலேயே பிரதமர் மோடி சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தகவல் தெரிவித்துள்ளார்.

பி.வி.ஆர். சுப்பிரமணியம் வெளியிட்ட தகவல் பற்றி சர்வதேச செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஒன்றிய நிதியமைச்சகம், பிரதமர் அலுவலகம் பதில் தரவில்லை. மத்திய வரிகளில் மாநிலங்கள் பெறும் பங்கை 32%-ல் இருந்து 42%-ஆக அதிகரிக்க வேண்டும் என டிசம்பர் 2014-இல் நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளது. ஆனால் நிதிக்குழுவின் பரிந்துரையை மீறி மாநிலங்களுக்கான பங்கு 33% என்ற அளவிலேயே இருக்க வேண்டும் என்பதுதான் மோடி அரசின் விருப்பமாக இருந்துள்ளது. அரசியல் சாசனப்படி நிதிக்குழு பரிந்துரைகளை ஒன்றிய அரசு ஏற்க வேண்டும் அல்லது ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் புதிய நிதிக்குழுவை ஒன்றிய அரசு அமைக்க வேண்டும். ஒன்றை ஏற்றுக்கொண்டு, மற்றொன்றை ஏற்க முடியாது என அரசியலமைப்புச் சட்டப்படி சொல்ல இயலாது. ஆனால் அரசியலமைப்புச் சட்டமே செல்லாது என்று அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்ற அளவில், அனைத்து வரம்புகளையும் மீறிக்கொண்டிருக்கிறது மோடி அரசு.

மாநிலங்களுக்கான நிதியை குறைக்க நடக்கும் முயற்சிகளை அரசு அதிகாரி ஒருவரே முதல்முறையாக ஒப்புக்கொண்டு இருக்கிறார். நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுவதாக தொடர்ச்சியாக எழுந்துவரும் தென் மாநிலங்களில் குரலில் உண்மையிருக்கிறது என்பதை இச்செய்தி உறுதி செய்திருக்கிறது.

# "ஜல்லிக்கட்டின் காட்டுமிராண்டித்தனங்களும் மூடநம்பிக்கைகளும்"

**ம.கி.எட்வின் பிரபாகரன்**

ஜல்லிக்கட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதற்கு எத்தனையோ போலியான பண்பாட்டு பெருமிதக் காரணங்கள் சொல்லப்பட்டாலும் கூட, உண்மை வேறாக இருக்கின்றது. ஜல்லிக்கட்டினுடைய மூலாதாரமான நோக்கம் ஒரு வீரனின் ரத்தம் விவசாய நிலத்தில் சிந்தப்பட வேண்டும் என்பதுதான். அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டிற்கு நீங்கள் சென்றால் தெரியும். முதல் காளையான ஊரின் கோவில் காளையை அவிழ்த்து விடுவதற்கு முன்பு, அந்த மக்கள் சாமியிடம் வேண்டிக் கொள்வதெல்லாம், "இந்த வருசம் அதிகமா குத்து விழணும் சாமி" என்பதுதான்.

நிறைய காளைகள் பிடிபட வேண்டும் என்று சாமி கும்பிட மாட்டார்கள். ஜல்லிக்கட்டின் பிரதான நோக்கம் காளையை அணைவதல்ல; வீரனை அடையாளப்படுத்துவதுதான். தனது நிலத்தில் வீரனின் ரத்தம் சிந்தப்படுவதன் மூலம் விவசாயம் செழிக்கும் என்ற விவசாய சமூகத்தின் ஆதி நம்பிக்கையே இதன் அடிப்படை. கோவில்களில் நடக்கும் வேள்வியின் எச்சங்களை கொண்டு வந்து நிலத்தில் தூவுவதோ அல்லது கோவில் தீர்த்தங்களை கொண்டு வந்து நிலத்தில் தெளிப்பதோதான் விவசாயம் செழிப்பதற்கான வழி என்ற வைதீக நம்பிக்கைக்கு மாற்றாக, மனிதனின் ரத்தத்துளிகளை உரமாக்கும் உழைக்கும் மக்களின் நம்பிக்கை வெளிப்பாடே இது.

அதனால்தான் ஜல்லிக்கட்டு வைதீகக் கோவில்களின் வழிபாட்டு விழாக்களுக்காக நடத்தப்படுவது இல்லை. உழைக்கும் மக்களின் நாட்டார் வழிபாட்டு மரபின் பகுதியாகவே நடத்தப்படுகிறது." என்று தீக்கதிர் இதழில் (14/06/2016) மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் தெரிவித்துள்ளார்.

அதுபோல, ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தும் ஊர் மக்களிடம் இது குறித்து கேட்ட போதும், "ஏற்கெனவே ஒரு தடவை நிதி நெருக்கடியில எங்க ஊரு ஜல்லிக்கட்ட நடத்த முடியாம விட்டிருக்காங்க. அது தெய்வ குத்தமாகிப் போனதால ஊரே வாந்தி, பேதினு வந்து அல்லோல கல்லோலபட்டுப் போச்சு. உடனே ஊர்கூடி முடிவெடுத்து, ஜல்லிக்கட்ட நடத்தி முடிச்சு தெய்வத்தோட உக்கிரத்த தணிச்சிருக்காங்க. அதனால இப்ப தடைபோட்டா, மறுபடியும் ஊருக்குப் பேரழிவு வந்துரும்னு பெரியவங்க பயப்படுறாங்க." (ஜூனியர் விகடன் - 07 ஜனவரி, 2007) என்றே பதில் அளித்துள்ளனர்.

அதேபோல நியூஸ் 7 தொலைக்காட்சியில் இதுகுறித்து நடைபெற்ற விவாதத்திலும் கூட, ஷாலினி என்ற மதுரை பெண், ""ஊரே செழிப்பு இல்லாமல் போய்விட்டது. சின்ன சின்ன வயசுப் பசங்க என்ன காரணம் என்று தெரியாமல் திடீர் திடீரென்று இறந்துவிடுகிறார்கள். அந்தக் காலத்துலே ஜல்லிக்கட்டு ஏன் வந்தது என்றால், ஊரில் பெரிய வியாதி வந்ததாம். அதை சரி பண்ணுவதற்கு, இந்த மண்ணில் ரத்தம் சிந்த வேண்டும் என்று நம்பினார்களாம். அதற்காக ஜல்லிக்கட்டைக் கொண்டு வந்தார்கள்" என்ற கருத்தை கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

ஆக, ஜல்லிக்கட்டு போட்டி என்பது ஒரு ஆண்மகனின் ரத்தம் மண்ணில் சிந்தப்படும் போது அந்த மண் செழிக்கும் என்கிற மிக மோசமான காட்டுமிராண்டி கால மூடநம்பிக்கையின் அடிப்படையிலேயே விளையாடப்படுகிறது என்பதும், இதனாலேயே ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு மிகப் பெரிய ஆதரவானது கிராமத்து சிறு தெய்வ வழிபாட்டில் ஈடுபடும் மக்களிடம் உள்ளது என்பதும் தெளிவாகிறது. அதேபோல, ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தாவிட்டால் தெய்வ குத்தம் ஆகிவிடும் என்கிற சிந்தனை ஓட்டமும் மக்களிடம் இருக்கின்றது. அறிவியல் வளர்ச்சி இல்லாத காலகட்டத்தில், வாந்தி பேதி ஏற்பட்டால் அதற்கு என்ன காரணம் என்று மக்கள் அறியாதிருந்த காலகட்டத்தில், இத்தகைய மூடநம்பிக்கைகள் சமூகத்தில் நிலவி வந்திருப்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால், அறிவியல் வளர்ச்சி மிக வேகமாக நடைபெற்று, பல்வேறு துறைகளிலும் நாம் முன்னேறி இருக்கக்கூடிய இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் கூட, வாந்திபேதிக்கு காரணமான சுகாதாரமற்ற பழக்க வழக்கங்களையும், நோய்க் கிருமிகளையும் பற்றிய புரிதல் இல்லாமல், அறியாமையில் மக்கள் இருப்பதே இந்த கண்மூடித்தனமான ஜல்லிக்கட்டு ஆதரவுக்கான காரணமாக இருக்கின்றதே தவிர, "இது தமிழர் பாரம்பரியம்" என்ற காரணமோ, நாட்டு மாடுகளை காப்பாற்ற வேண்டும் என்ற காரணமோ, நாட்டு மாடுகளால் மட்டும்தான் சத்தான பாலை வழங்க முடியும் என்கிற உண்மைக்கு புறம்பான காரணமோ மெய்யான காரணங்கள் அல்ல என்பதும், மனிதர்களின் ரத்தத்தை காணிக்கையாகத் தரக்கூடிய ஆதிகாலத்து நரபலி கலாச்சாரத்தின் மிச்ச சொச்சமே இந்த ஜல்லிக்கட்டு பழக்க வழக்கம் என்பதும், எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி புலனாகிறது.

சில சமூக அக்கறையாளர்கள், மாட்டின் கொம்பில் கூம்பு வடிவத்தில் ஏதாவது தற்காப்பு கருவிகளை பொருத்தினால், மனிதர்களை மாடு குத்தும் பொழுது மனிதர்களுக்கு ஏற்படும் காயத்தை குறைக்கலாம் என்கிற கருத்தை தெரிவித்து வருகின்றனர். ஆனால் மாட்டை வளர்ப்பவர்களுக்கோ, மனிதர்களின் ரத்தம் மண்ணில் விழ வேண்டும்; அப்போதுதான் மண் செழிக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறபடியால், மாட்டின் கொம்பை மிகக் கூர்மைப்படுத்தும் செயல்களில்தான் ஈடுபடுகின்றனர். எனவே மற்ற விளையாட்டுப் போட்டிகளைப் போல,

தொடர்ச்சி 4ம் பக்கம்

**தலையங்கம்**

# ராமரை புறக்கணித்த தமிழ்நாடு!

அயோத்தியில் ராமர் கோயில் திறக்கப்பட்டதால் ராமராஜ்ஜியமே அமைத்துவிட்டதைப் போல சங்கிகள் மிதக்கிறார்கள். ராமர் கோயில் குடமுழுக்கு நடந்த நாளில் வீடுகளில் விளக்கேற்றுங்கள், வழிபடுங்கள் என்றெல்லாம் பாஜகவினர் நாடு முழுக்க மக்களிடையே பரப்புரை செய்தார்கள். நாடு முழுக்க ராமரை வைத்து அரங்கேறிய கூத்துக்கள் கொஞ்ச நஞ்சமல்ல. நாடு முழுக்க பல இடங்களில் அன்றைய தினம் கோயில்களுக்கு சென்ற பக்தர்களின் கைகளில் ராமர் படங்களையும், அயோத்தி பிரசாதம் என்ற பெயரில் ஒன்றையும் வலிந்து திணித்திருக்கிறார்கள்.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தும் அரைநாள் விடுமுறை அளித்தனர். பாஜக ஆளும் மாநிலங்களில் அன்று அரசு விடுமுறை. உத்தரபிரதேசத்திலும் அதனைச் சுற்றியுள்ள அண்டை மாநிலங்களிலும் ஜனவரி 22 அன்று, இந்துக்கள் யாராவது இறந்தால் பிணங்களை எரிக்கக் கூடாதென தடை விதிக்கப்பட்டது. போர்க்காலங்களில் கூட உலகில் எங்கும் மருத்துவமனைகள் மூடப்படுவதில்லை. ஆனால் ராமர் கோயில் திறப்புக்காக, டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையும் அரைநாள் விடுமுறை என அறிவித்து, மக்களிடம் விமர்சனங்கள் எழுந்ததை அடுத்து அம்முடிவை கைவிட்டனர். மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை அடிக்கல் நாட்டப்பட்ட நாளில் இருந்தே விடுமுறையில்தான் இருப்பதால் இங்கே எந்த சர்ச்சையும் எழவில்லை.

ராமர் கோயிலுக்காகவும், பிரசாதம் தயாரிப்பதற்காகவும் பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்களிடம் பெறப்பட்ட நன்கொடையை திருப்பிக் கொடுத்த அவலமும் சில மாநிலங்களில் நடந்திருக்கிறது. இந்தியா முழுவதும் ராமர்... ராமர் என்று ஒலித்துக்கொண்டிருக்க, தமிழ்நாடு மட்டும் அதற்கும் நமக்கும் என்ன தொடர்பு என்பதுபோல் வழக்கம்போல இயங்கிக் கொண்டிருந்தது. தமிழ்நாட்டிலும் கூட 90% காட்சி ஊடகங்களில் அன்றைக்கு அயோத்தி அவலத்தை நேரலை செய்துகொண்டிருந்தார்கள். தமிழிசை, நிர்மலா சீதாராமன், அண்ணாமலை, எல். முருகன் என பெரிய பட்டாளமே ராமரை வழிபடுங்கள் என்றெல்லாம் கூவிக் கூவி இந்துத்துவ வியாபாரம் செய்து பார்த்தார்கள். தமிழ்நாட்டு மக்கள் நேரலைகளையும் கண்டுகொள்ளவில்லை, நேரில் கூவியவர்களையும் பொருட்படுத்தவில்லை.

பாபர் மசூதியை இடித்துவிட்டு, அந்த இடத்தில் கட்டப்பட்ட ராமர் கோயில் ஒருபோதும் இந்துக்களின் வழிபாட்டுச் சின்னம் ஆகாது, அது அவமானச் சின்னம் என்ற புரிதல் தமிழ்நாட்டு மக்களிடம் அப்பட்டமாக வெளிப்பட்டதைக் கண்டு சங்கிகள் மனம் புண்படாமல் இருந்தால்தான் ஆச்சரியம். இந்தியா முழுமைக்கும் ராமர் கடவுளாக இருக்கலாம், ஆனால் தமிழ்நாட்டு மக்கள் அவரை வைத்திருக்கும் இடமே வேறு. அதை மீண்டுமொரு பாஜகவிற்கும் பாஜகவுக்கு துணைபோகும் தமிழ்நாட்டு செய்தி ஊடகங்களுக்கும் அடித்துச் சொல்லியிருகிறார்கள்.

தமிழ்நாட்டில் அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக்கலாம் என்றால், பார்ப்பனர்கள் ஆகமத்தை தூக்கிக்கொண்டு வருவார்கள். ஆனால் அயோத்தியில் கட்டி முடிக்கப்படாத கோயிலை எப்படித் திறக்கலாம்? கோபுரம் இல்லை, கலசம் இல்லை...ஆகமத்துக்கு அடுக்குமா என்று எந்த பார்ப்பனரும் கேட்கவில்லை. அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அயோத்தி ராமர் கோயில் என்பது பாஜகவின் அரசியல் முதலீடு. 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு பாஜகவுக்கு இருக்கும் ஒற்றை ஆயுதம் அயோத்தி ராமர் கோயில்.

10 ஆண்டுகால ஆட்சியில் சாதனை, சரித்திரம் என்று மக்களிடம் பேசுவதற்கு எதுவுமே இல்லாத கையறு நிலையில் இருக்கும் நரேந்திர மோடி, இந்துக்களே இதோ பாருங்கள்... ராமர் கோயிலை எவ்வளவு பிரம்மாண்டமாக கட்டியிருக்கிறோம் என்று சொல்லியாவது வாக்கு கேட்கலாம் என்ற முயற்சிதான் இது. அதனால்தான் சங்கராச்சாரிகள் சூத்திரரான மோடி எப்படி ராமர் சிலையை நிறுவலாம்? நாட்டுக்கே பெருங்கேடு விளையும் என்று இழிவுபடுத்தியபோதும் நரேந்திர மோடி மவுனம் காத்தார்.

சங்கராச்சாரிகளின் எதிர்ப்புக்கு அடிபணிந்து, ராமர் கோயில் அறக்கட்டளையும் திறப்பு விழாவுக்கு 4 நாட்கள் முன்னதாகவே குழந்தை ராமர் சிலையை அவசர அவசரமாக கருவறைக்குள் நிறுவி, 4 மணி நேரம் பூஜை, புனஸ்காரங்களையும் செய்துவிட்டனர். ராமர் சிலையின் கண்களை மட்டும் துணியால் கட்டிவைத்து, ஜனவரி 22-ஆம் தேதி நரேந்திர மோடியை வைத்து துணியை மட்டும் திறந்துவிட்டனர். அதற்கு உயிரூட்டும் நிகழ்வு என்றும் பெயர் சூட்டினர்.

மராட்டிய மாநிலம் புனேவில் பாபர் மசூதியை நினைவுகூறும் விதமாக அன்றைய தினம் மாணவர்கள் அமைப்பு போராட்டம் ஒன்றை நடத்தியது. அந்த போராட்டத்திற்குள் புகுந்த இந்துத்துவா கும்பலைச் சேர்ந்தவர்கள் பதாகையை எரித்ததுடன், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதலும் நடத்தியிருக்கிறார்கள். ஆவணப் படம் திரையிட கடும் எதிர்ப்புகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ராமர் கோயிலுக்கு எதிராகப் பேசுவதோ, போராட்டத்தில் ஈடுபடுவதோ கூடாது என்று சில பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்திருக்கின்றன. ராமர் கோயில் திறப்புக்கே இத்தனை அடக்குமுறைகள் என்றால், ராமராஜ்ஜியம் என்னென்ன அடக்குமுறைகளை கொண்டிருக்கும் என்று எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது.

ஏற்கெனவே நரேந்திர மோடி ஆட்சியும் ஒரு மினி ராமராஜ்ஜியமாகத்தான் 10 ஆண்டுகளை கழித்திருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 30 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டனர் என்று தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஒன்றிய அரசால் நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகளுக்கு அஞ்சி, ராஜஸ்தானின் கோட்டா நகரில் கடந்த ஓராண்டில் மட்டும் 28 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். மணிப்பூர் கலவரத்தில் 175க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கின்றனர். சிறுபான்மையினர், பட்டியல் சமூகத்தினர் வன்கொடுமைகள், கொலைகளுக்கெல்லாம் கணக்கே இல்லை.

அதுமட்டுமின்றி, கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் என மோடி ஆட்சியில் மக்களுக்கு இழப்புகள் மட்டுமே மிஞ்சியிருக்கிறது. அதையெல்லாம் அயோத்தி கோயில் பூர்த்திசெய்துவிடாது. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல, மக்களின் கோபத்தை அதிகரிக்கவே செய்திருக்கிறது அயோத்தி ராமர் கோயில். அதை மக்கள் வெகுவிரைவில் உணர்த்தத்தான் போகிறார்கள்.

# கழகம் முன்னெடுத்த பொங்கல் விழாக்கள்

*மயிலைப்பகுதி 8ம் ஆண்டு தமிழர் திருநாள் மற்றும் பொங்கல் விழா பரிசளிப்பு - கலை நிகழ்ச்சிகள் 15.01.2024 அன்று சுப்பராயன் சாலை பெரியார் படிப்பகம் முன்பு நடைபெற்றது.*



*நடனம் - சிலம்பாட்டம் - குத்துச்சண்டை - மயிலாட்டம் உள்ளிட்ட நிகழ்வுகளை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தென்சென்னை மாவட்ட வழக்கறிஞரணி துணை அமைப்பாளர் சரவணன், விசிக 126வது வட்ட செயலாளர் கண்ணன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.*

*விளையாட்டுப் போட்டிகளில் வென்றவர்களுக்கு மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, மயிலாப்பூர் கிழக்கு பகுதிச் செயலாளர் முரளி, மயிலாப்பூர் மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி ஆகியோர் பரிசளித்து சிறப்பு செய்தனர்..*

*Arun Ace Dance குழு, ஆசான் ஆதி கேசவன் சிலம்பம் குழு, VS Boxing Club குழு மற்றும் SS மயிலாட்டம் குழுவினருக்கு பரிசுகளை வழங்கி பாராட்டுத் தெரிவித்தனர்.*

*மயிலைப் பகுதி பொங்கல் விழாக்குழு மயிலைப்பகுதி : தி.இராவணன், க.சுகுமாறன், ம.மனோகர், அ.சிவா, ஜா.உமாபதி, அ.பார்த்திபன், சீ.பிரவீன்குமார்.*



**வட சென்னை :** *தமிழர் திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக சேத்துப்பட்டு வைத்தியநாதன் தெருவில் விளையாட்டு போட்டிகள் - பரிசளிப்பு விழா - கலை நிகழ்ச்சிகள் 15.01.2024 அன்று நடைபெற்றது.*

*விழாவில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, சேத்துப்பட்டு இராசேந்திரன், டேவிட் பெரியார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். விழாவை வடசென்னை வேலு ஒருங்கிணைத்தார்.*




**திருப்பூர் :** *திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக 14ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா 21.01.2024 ஞாயிறு அன்று மாஸ்கோ நகரில் நடைபெற்றது.*

*விழாவிற்கு மாநகரக் கழகச் செயலாளர் மாதவன் தலைமை தாங்கினார். விழாவினை கழகப் பொருளாளர் துரைசாமி தொடங்கி வைத்தார்.*

*தொடர்ந்து அப்பகுதி வாழ் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.*

*மாலை பரிசளிப்பு விழா மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிஷா பாடல்களை பாடினார். யாழ் இசையின் சிலம்பாட்டம், நிமிர்வு கலை குழுவினரின் பறை இசை ஆகியவை நடைபெற்றது.*

*மாநகர அமைப்பாளர் முத்து வரவேற்புரையாற்றினார், மாவட்டத் தலைவர் முகில்ராசு, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, நவீன மனிதர்கள் குழு பாரதி சுப்புராயன், கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் கருத்துரையாற்றினர்.*

*விளையாட்டுப் போட்டிகளில் வென்றவர்களுக்கு கழக அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈஸ்வரன் ஆகியோர் பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர்..*

*நிகழ்வுகளில் பங்கேற்ற மருத்துவ மாணவர் இளம் பாரதி, தொல்லியல் மாணவர் கனல்மதி, வழக்கறிஞர் மாணவர் கௌதம் ஆகியோருக்கு புத்தகம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. நிறைவாக சங்கீதா நன்றியுரை நிகழ்த்தினார்.*

*மாவட்டத் தலைவர் முகில்ராசு, மாவட்டச் செயலாளர் நீதிராசன், தெற்கு பகுதிச் செயலாளர், ராமசாமி, மாநகரத் தலைவர் தனபால் மாநகர அமைப்பாளர் முத்து, 15.வேலம்பாளையம் அமைப்பாளர் மாரிமுத்து, கோமதி, அய்யப்பன், ராஜ்குமார், நாகராஜ், அய்யா ராமசாமி, சிரிஜா, இரமேசு, கணபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.*

# இராமனுக்கு கோயில் கட்டியது எதற்காக? (2)

*(18.01.2024 இதழில் வெளியான* **கட்டுரையின் தொடர்ச்சி)**



## பேராசிரியர் ஜெயராமன்

தென்னிந்தியாவில் கிபி மூன்றாம் நூற்றாண்டு வரைக்கும் சங்ககாலம் என்று பெயர். அந்த காலத்தில் ஜாதி என்பதே அறவே கிடையாது. ஒருவன் ஒரு பெண்ணைப் பார்த்து அவள் மீது ஆசை கொண்டால் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம். களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை போன்ற வாழ்க்கைமுறைகளில் இவர்கள் வாழ்ந்தார்கள். அந்த காலகட்டத்தில் பல்லவர்கள் வருகிறார்கள். பின்னர் தமிழ்நாட்டை கைப்பற்றுகிறார்கள். அவர்கள் பரத்வாஜ கோத்திரம் எனும் பார்ப்பன சமூகத்தை சேர்ந்தவர்கள். இது அவர்களுடைய கல்வெட்டு செப்பேடுகளில் உள்ளது.

அவர்கள் தமிழ்நாட்டில் நுழையும் போதே வர்ண தர்மத்தை கொண்டுவருகிறார்கள். பின்னர் சிறுகச்சிறுக பார்ப்பனர்கள் தமிழ்நாட்டிற்குள் நுழைந்தனர். இந்த பல்லவர்கள் காலத்தில் தான் குகை கோயிகள், கற்கோயில்கள் வடிவமைக்கப்பட்டன. பல்லவர் காலத்திற்கு பிறகு கிபி ஒன்பதாம் நூற்றாண்டில் இங்கு சோழர்கள் ஆட்சி தொடங்கியது. அப்பொழுது தான் இங்கு மிகப்பெரிய அளவில் கோயில்கள் கட்டப்பட்டன. வெறும் கற் கோயில்கள் உருவாக்கப்பட்ட போதே கங்கை கரையில் இருந்து ஏராளமான பார்ப்பனர்கள் இங்கு வரவழைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

அவர்கள் அதிகமாக வந்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. பார்ப்பனர்கள் இங்கு நுழைவதற்கு முன்புவரை நிலம் என்பது சமூக சொத்தாகத்தான் இருந்தது. அவர்கள் வந்த பின்னால் தனியுடைமை என்பது உருவாகி நிலவுடைமைச் சமூகங்கள் உருவெடுத்தன. கற் கோயில்கள் - பார்ப்பனர்கள் வருகை - நிலவுடைமைச் சமூகம் தோற்றம் - பேரரசுகளின் தோற்றம் இவைகளெல்லாம் சமகாலத்தில் நடந்தவை. அப்போது இந்த நிலவுடைமைச் சமூகத்தவருக்கு உழைப்புச் சுரண்டல் செய்வதற்கான தத்துவங்களை வந்தேறிப் பார்ப்பனர்கள் வழங்கினார்கள்.

எங்களிடம் சனாதன தர்மம் என்ற வாழ்வுமுறை இருக்கிறது. அந்த சனாதன தர்மத்தை அரசர்களே நீங்கள் கைகொண்டீர்கள் என்றால் உங்களுக்கு எல்லா நிலங்களும் விளையும், விருப்பப்பட்டால் ஊதியம் வழங்கலாம், உழைப்பை சுரண்டி கொழுக்கலாம் என்றனர். அதை மன்னர்களும் நிலவுடமையாளர்களும் கைக்கொண்டார்கள். அந்த சனாதன தர்மம் நிலைநிறுத்தப்பட்டது.

புறநானூறில் ஜாதிகளை குறிப்பிடவில்லை. ஆனால் குடிகளைப் பற்றி பேசியிருக்கிறது. குடிகளும், குலங்களும், வெவ்வேறு தொழிற்பிரிவுகளும் மெல்ல மெல்ல ஜாதிகளாக மாற்றப்பட்டன. ஜாதிகளாக மாறிய பிறகு இவர்கள் தங்கள் ஜாதிகளை மாற்ற முடியாது என்று கட்டாயமாக்கப்பட்டது. இப்படித்தான் சனாதனம் என்பது தமிழ்நாட்டிற்குள் நுழைந்தது.

சனாதனம் என்பது ஆரிய மதம். ஆரியர்களின் சமூகக் கட்டமைப்புக்கு பெயர் வர்ணாசிரம் தர்மம். அது அவர்களுடைய நூல்களிலேயே வருகிறது. வருண + ஆஸ்ரம + தர்மம் = வர்ணாசிரம தர்மம். பிராமண - சத்திரிய + வைசிய + சூத்திரர், இது வருண தர்மம். ஆஸ்ரம தர்மமென்றால் ஒவ்வொரு ஆரியருடைய வாழ்க்கையிலும் நான்கு பருவங்கள் இருக்கிறது. பிரம்மச்சாரி - பாடம் படிப்பவர், கிரகஸ்தா = திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்த வேண்டும், வன பிரஸ்தன் - காட்டுக்குள் சென்று நூல்களைப் படிக்க வேண்டும், சன்னியாசி- எல்லாம் துறந்தவனாக இருக்க வேண்டும். இது ஒவ்வொரு ஆரியனுக்கும் கட்டாயம். அந்த ஒட்டுமொத்த ஆரிய சமூகமும் அவனவன் கடமையை மட்டும் தான் செய்ய வேண்டும். மாறக்கூடாது, இதுதான் வர்ணாசிரம தர்மம்.

பார்ப்பனர் ஒருவர் ஓடிவந்து இராமா..! எனது மகன் இறந்து போனான், உனது ஆட்சியிலே எவனோ ஒருவன் தர்மத்தை மீறி இருக்கிறான் என்று சொன்னான். இல்லை தர்மத்தை மீறி இருக்கமாட்டான் என்று இராமன் கூற, இல்லை எவனோ ஒருவன் தனது ஜாதித் தொழிலை விட்டுவிட்டு உயர்ந்த ஜாதித் தொழிலை செய்கிறான். அதனாலல்லவா எனது மகன் இறந்தான் என்று கூற, உடனே இராமன் வாளை எடுத்துக்கொண்டு மலை மேல் ஏறிப் போகிறார். மலையில் ஒரு புற்று வளர்ந்திருந்தது. அந்த புற்றில் ஒருவன் தலைகீழாக நின்று தவம் செய்துகொண்டிருந்தான்.

**இராமன் : யார் நீ?**

**சம்பூகன் : நான் தான் சம்பூகன்**

**இராமன் : என்ன செய்கிறாய்?**

**சம்பூகன் : தவம் செய்கிறேன் அய்யா! அந்த பரம்பொருளை நானும் காணவேண்டும் என்று ஆசை**

**இராமன் : உன் தர்மம் என்ன?**

**சம்பூகன் : நான் சூத்திரன் அய்யா!**

**இராமன் : என்னது ஒரு சூத்திரன் தவம் செய்வதா?** என்று கூறி சம்பூகனின் கழுத்தை அறுத்துக் கொண்டு வருகிறார் இராமன். என்ன ஆச்சரியம் இறந்து கிடந்த பிராமணனின் மகன் மீண்டும் உயிர்பெற்று எழுந்தான். இவ்வாறு இராமன் வர்ண தர்மத்தை காத்தார். அதனால் தான் இராமனுக்கு கோயில் கட்டுகிறார்கள். இராமனுக்கு கோயில் கட்டுவதன் அர்த்தம் என்னவென்றால் இந்த நாட்டில் வருங்காலத்தில் கோயில் கட்டப்படும் என்று அர்த்தம். வர்ணாசிரம தர்மம் மீண்டும் நிலைநிறுத்தப்படும் என்று அர்த்தம்.

இந்த தர்மத்தை தமிழ்நாட்டிற்குள்ளும் கொண்டுவந்து சனாதன தர்மத்தை கடைபிடிக்க வைத்தார்கள். சனாதம் என்றால் மாறாதது. நிலையானது. இது மனுஸ்மிருதி, பகவத்கீதை, பாகவத புராணம் உள்ளிட்டவைகளில் வருகிறது. என்ன நிலையானது என்று கேட்டால் சூத்திரன் சூத்திரனாகவே இருக்க வேண்டும். பிராமணன் உயர்ந்தவனாகவே இருக்க வேண்டும். இது இறைவன் வகுத்தது. இன்னொருவன் மாற்ற முடியாதது. மாற்ற வேண்டுமென்று நினைத்தால் அது தண்டனைக்குரிய குற்றம். அது அனுமதிக்க முடியாதது.

பிராமணனே என்றென்றும் தலைவன். பிராமணனுக்கு அடுத்தது இடைநிலை, கடைசியில் சூத்திரன், அவன் நிரந்தர அடிமை என்பது சனாதனம், அதாவது நிலையானது. இது எவ்வளவு காலமாக நிலைநிறுத்தப்பட்டுவருகிறது. இதை யார் மீற நினைத்தாலும் அவர்கள் கொல்லப்படுவார்கள். இதை மாற்றியமைக்க முயற்சித்த புத்தரையே இன்றைக்கு விஷ்ணுவின் பத்தாவது அவதாரமாக மாற்றி மூழ்கடித்துவிட்டனர் பார்ப்பனர்கள். புத்த மதத்தை பரப்பிய அசோகரின் சந்ததியில் வந்த கடைசி மன்னர் பிரகத்ரதன் தனது படை அணிவகுப்பை பார்த்துக் கொண்டு வரும்போது புஷ்யமித்ர சுங்கன் என்னும் பார்ப்பான் வெட்டி துண்டாக்கி வீசிவிட்டு ஆட்சியை கைப்பற்றி மீண்டும் சனதன தர்மத்தை நிறுவினான். நிறுவி ஒரு புத்த பிட்சுவின் தலையை கொண்டுவந்தால் 100 பொற்காசுகள் என்று அறிவித்து புத்த பிட்சுகளையே அடியோடு அழித்தான் புஷ்யமித்ர சுங்கன்.

ஆர்.என்.ரவி என்ற பார்ப்பனர், சனாதனம் இந்தியாவின் ஆன்மா என்கிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஜனவரி 26,1950-இல் நடைமுறைக்கு வந்தது. நவம்பர் 26, 1949-இல் இந்திய அரசியல் சட்டம் எழுதி முடிக்கப்பட்டது. அதற்கு ஒரு வருடத்துக்கு முன்னால் இந்தியாவிற்கு என்ன பெயர் வைப்பது என்ற விவாதம் நடைபெற்றது. காயிதே மில்லத் போன்றவர்கள், இந்தியா என்ற பெயர் சமய சார்பற்ற சொல். இந்த நிலப் பரப்பிற்கு அந்த காலத்தில் இருந்தே இந்தியா என்று தான் இருந்துவருகிறது. கிரேக்கர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஐரோப்பியர்கள் இந்தியா என்றுதான் குறித்திருக்கிறார்கள். ஆகவே இந்த நாட்டிற்கு இந்தியா என்று பெயரிட வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது கோவிந்தாஸ் போன்றவர்கள் இந்தியாவிற்கு 'பாரத வர்ஷா' என்று பெயர் வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். ஆரிய வர்ஷா என்று பெயர் வைக்க வேண்டும். இது ரிஷிகள் நடமாடிய இடம், ஆரியர்களின் புண்ணிய பூமி. ஆரியர்களின் பூர்வகுடி பரதன் ஆண்ட நிலம் இது. ஆகவே இதற்கு ஆரிய வர்ஷா என்று பெயர் வையுக்கள் என்று கோரிக்கை வைத்தார்.

உடனே ஜவகர்லால் நேரு, ஆரியர்கள் குடியேறிய இடத்திற்கு ஆரிய வர்ஷா என்று பெயர் இருக்கிறது. ஆகவே இந்தியாவிற்கு அந்த பெயர் வைக்க முடியாது என்று கூறினார். பாரதம் என்று வையுங்கள் அது புனித பெயர், இந்தியா என்பது அன்னியர்கள் கொடுத்த பெயர். ஆகவே இந்தியா என்பதை ஏற்க முடியாது என்றனர். இறுதியாக *India that is Bharath*, இந்தியா பாரத்தில் இருக்கிறது என்று கூறிய போது *Bharath that is India* என்று பெயர் வையுங்கள் என்றனர். இந்த சனாதனிகள், ஜாதிமத வெறியர்கள் அவர்களுடைய வெற்றியை அங்கு நிலைநிறுத்தினார்கள்.

பாரதம் அல்லது இந்து ராஷ்டிரத்தில் கிறுஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் வாழ அனுமதி கிடையாது. இதை ஆர்.எஸ்.எஸ்-ன் மாபெரும் தலைவர் சாவர்க்கர் கூறி இருக்கிறார். கிறுஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் இல்லாமல் இந்துக்கள் மட்டுமே வாழும் நாடு. ஆனால் இந்துக்கள் சனாதன தர்மப்படி வாழ வேண்டும்.

காசி பல்கலைக்கழகம் 1890-களில் பள்ளிகூடமாக இருந்தது. மதன் மோகன் மாளவியா, அவருக்கு மண்ணுருண்டை மாளவியா என்று இன்னொரு பெயரும் உண்டு. அந்த பள்ளியில் பார்ப்பன பிள்ளைகள் படிப்பதற்கு சனாதன தர்மம் என்ற பாடத்தை உருவாக்கினார். அந்த நூலை 1905-இல் மதுரை பிரம்ம ஞான சபையின் தலைவர் பா.நாராயணன் சனாதனம் என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார். அந்த நூல் மூன்று பகுதிகளை கொண்டது. அதில் இரண்டாவது தொகுதியில் ஆஷ்ரமங்கள் மற்றும் நான்கு வர்ணங்கள் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதை அனைவருக்கும் கற்பித்தனர். அந்த சமூகக் கட்டமைப்புக்கு பெயர் வர்ணாசிரம தர்மம். அதில் பொருந்தி வாழக்கூடிய ஆரிய வாழ்வியலுக்கு பெயர் சனாதனம் என்று பெயர். எப்படி வாழ வேண்டும் விதிகளை விதிப்பதற்கு ஸ்மிருதி என்று பெயர். மனுஸ்மிருதி, நாரதஸ்மிருதி, யஜனவாக்ய ஸ்மிருதி இந்த மூன்று ஸ்மிருதிகளும் முக்கியமானவை. இதில் தான் பிராமணர்களை திட்டினால் 10 அங்குல கம்பியை பழுக்க காய்ச்சி அவனது கழுத்தில் சொருக வேண்டும். பெண்களுக்கு ஒருகாலமும் சுதந்தரம் என்பது கிடையாது, அது பிராமண வீட்டுப்பெண்ணாக இருந்தாலும் அவர்கள் சூத்திரர்களே என்று அந்த விதிகள் கூறுகிறது. அடிக்க வேண்டிய பட்டியலில் மத்தளத்திற்கு அடுத்தபடியாக பெண்கள் உள்ளனர். இந்த சனாதனத்தை தான் அவர்கள் நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

(தொடரும்)

**தொகுப்பு : விஷ்ணு**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மாட்டுடன் மல்லுக்கட்டுவது வீரமல்ல, முதிர்ச்சியற்ற மனோபாவம்

முதல் பக்க தொடர்ச்சி

பாதுகாப்பு உபகரணங்களுடன் இந்த விளையாட்டை நடத்தக்கூடிய ஒரு சூழல், மக்களுடைய நம்பிக்கைக்கு உகந்ததாக இல்லை. அரசு, அப்படி ஒரு பாதுகாப்புத் திட்டத்தை கொண்டு வந்தாலும் கூட, அது மண்ணில் விழும் ரத்தத்தை தடுக்கும் என்பதால், மக்கள் அதனை எதிர்க்கத்தான் செய்வார்கள்.

சங்க காலத்தில் விளையாடப்பட்ட ஏறுதழுவுதலுக்கும் இக்கால ஜல்லிக்கட்டுக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. இக்கால ஜல்லிக்கட்டை, ஏறுதழுவுதல் என்று நாம் எடுத்துக் கொள்ள முடியாது. அந்த காலத்தில் பெண்களுக்கு சொந்தமான பல காளைகள், ஒரு தொழுவத்தில் நிறுத்தப்பட்டிருக்கும். ஒரு பெண்ணுக்குரிய காளையை ஒரு இளைஞன் அடக்கினால், அவனுக்கு அந்த பெண்ணை மணமுடிக்கும் தகுதி வந்ததாகக் கருதப்படும். இந்த வழக்கம் சில சமூகங்களிடம் இருந்து வந்தது. ஆனால் இன்றைய ஜல்லிக்கட்டு என்பது மணம் முடிப்பதற்காக நடத்தப்படும் நிகழ்வல்ல. மாறாக, ரத்த காணிக்கை தருவதற்காக நடத்தப்படும் நிகழ்வாகும். இது நாயக்க மன்னர்கள் ஆட்சி காலத்தில் கொண்டுவரப்பட்ட விளையாட்டு என்று எழுத்தாளர்கள் காந்தி ராஜன், சந்திரசேகரன் ஆகியோர் எடுத்துரைத்துள்ளனர். (“The Hindu”, 15.01.2008)

“ஜல்லிக்கட்டில் பிடிபடாத மாடுகள், பொலிகாளைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வீரியமான கன்றுகளைப் பெற பயன்படுத்தப்படும் என்று நண்பர்கள் பலர் சொல்கின்றனர்... அறிவியல்ரீதியாக இதில் எந்த உண்மையும் இல்லை. ஆரோக்கியமான ஆணும், ஆரோக்கியமான பெண்ணும் இணைவதன் மூலம் ஆரோக்கியமான குழந்தை பிறக்கும் என்பதுதான் மருத்துவ அறிவியல். பலமான ஆண்தான் நல்ல குழந்தையைத் தரமுடியும் என்றால், அர்னால்ட், முகமது அலி, மைக் டைசன், WWF வீரர்கள் போன்றவர்கள்தான் உலகின் எல்லா குழந்தைகளுக்கும் தந்தையாக இருந்திருக்க வேண்டும்” என்ற தோழர் கீற்று நந்தனின் கருத்து மிகச் சரியானதாகும்.

ஜல்லிக்கட்டு நடத்தினால் மட்டுமே நாட்டுக் காளை இனங்களை பாதுகாக்க முடியும் என்ற ஒரு பொய்யான வாதம் முன்வைக்கப்படுகிறது. கோழிகள் இந்த நாட்டில் காப்பாற்றப்பட்டு வருகின்றன; ஆடுகள் காப்பாற்றப்பட்டு வருகின்றன; பன்றிகள் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இப்படி எத்தனையோ விலங்குகள் இந்த நாட்டில் ஜல்லிக்கட்டு போன்ற எந்த விளையாட்டுகளும் இல்லாமலேயே காப்பாற்றப்பட்டு வரும் நிலையில், மாட்டைக் காப்பாற்ற மட்டும் ஒரு விளையாட்டை நடத்தித்தான் ஆக வேண்டுமா? கோழி, ஆடு, பன்றி போன்ற விலங்குகளை மனிதர்கள் உண்ணும் காரணத்தினால், மனிதர்களின் தேவைக்கு ஏற்ற வகையில் கோழிப் பண்ணைகளும், பன்றித் தொழுவங்களும் அமைக்கப்பட்டு, இந்த விலங்கினங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அதேபோல, நாட்டுக் காளை இனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்கள், மாட்டுக்கறி உண்ணும் பழக்கத்தை அதிகப்படுத்தினால், மக்களின் தேவைக்கேற்ப மாட்டு இனங்களும் பாதுகாக்கப்படும். இதற்கு ரத்தம் சிந்தும் ஒரு விளையாட்டு தேவையில்லை.

நாட்டு மாட்டுப் பால் தான் சத்தானது எனவும், கலப்பின மாடுகளில் கறக்கப்படும் பால் சத்தானது அல்ல என்றும் மூடநம்பிக்கைகள் பரவலாக இருக்கின்றன. நம்முடைய உணவில் இருக்கும் கொழுப்புகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. நிறைவுறாத கொழுப்பு (Unsaturated fat), 2. நிறைவுற்ற கொழுப்பு (Saturated Fat), 3. மாறுபக்க கொழுப்பு (Trans-fat). இதில் மாறுபக்க வகை உணவுகளை நாம் அறவே தவிர்த்து விடுவது நல்லது. அதேபோல, நிறைவுற்ற கொழுப்பு வகை உணவுகளை எந்த அளவுக்கு குறைத்துக் கொள்கிறோமோ, அந்த அளவுக்கு நல்லது. இதனை ஈடுகட்டும் வகையில், நிறைவுறாத கொழுப்பு வகைகளை உட்கொள்வது உடலுக்கு நல்லது. பாலில் இருக்கும் கொழுப்பு என்பது நிறைவுற்ற கொழுப்பு வகையைச் சார்ந்தது. அது நாம் குறைவாக எடுத்துக் கொள்ள வேண்டிய கொழுப்பாகும். நாட்டு மாட்டுப் பாலில், நிறைவுற்ற கொழுப்பின் அளவு அதிகம் என்பதால், அந்த கொழுப்பு உடலுக்கு எந்த நன்மையும் செய்வதில்லை. அதனால், நம்முடைய தமிழ்நாடு அரசின் ஆவின் நிறுவனம், தேவையற்ற கொழுப்புகளை குறைத்து, நீல நிற பாக்கெட்டில் நிறமாக்கப்பட்ட பாலை (Toned Milk), இன்று வெகுஜன மக்களுக்கு வழங்கி வருகிறது. இவ்வாறாக, கொழுப்பு குறைந்த பால் வகைகள் தான், நம் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதாக இருக்கும் நிலையில், கொழுப்பு அதிகம் உள்ள நாட்டு மாட்டுப் பால் தான் ஆவினை விடவும் நல்லது என்பது, அறிவியலுக்கு எதிரான ஒரு கருத்தாகும்.

விவசாய தொழில்நுட்பங்களின் வளர்ச்சி தான் நாட்டு மாடுகளின் எண்ணிக்கை குறைவதற்கு காரணம். முன்பு மாடுகளை ஏர் உழ பயன்படுத்தி வந்த மக்கள், மாடுகளை பராமரிப்பதில் இருக்கும் அதிக செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக, உழவுந்துகளைப் (Tractor) பயன்படுத்தி வருகின்றனர். இன்னும் பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் எதிர்காலத்தில் வளரும்போது, விவசாயத்தில் மாடுகளின் தேவை குறையத்தான் செய்யுமே தவிர, அதிகரிக்கச் செய்யாது. எனவே மாடுகளை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள், அதற்கு மாற்றான மாட்டுக்கறி உணவு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வழக்கம்தான் இதற்கான தீர்வாக அமையும். நவீன தொழில்நுட்பங்கள் விவசாயத்தில் பெருகும் பொழுதுதான், தினக்கூலிகளாக பண்ணைகளில் பணிபுரியும் ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதாரம் உயர்கிறது.

கடந்த காலங்களில் ஜல்லிக்கட்டு போட்டிகளில் எத்தனையோ ஜாதிய வன்முறைகள் நிகழ்ந்துள்ளன. ஆதிக்கவாதிகளிகன் மாட்டை ஒடுக்கப்படுவோர் அடக்கிக் காட்டும் பொழுது, அது மிகப்பெரிய கலவரமாகவெல்லாம் வெடித்திருக்கின்றது. எப்படி பெரியார் இயக்கங்களின் “கோயில் கருவறை தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தை”, ஆத்திக ஆதரவுப் பிரச்சாரமாக எடுத்துக்கொள்ளாமல், ஆதிக்கத்துக்கு எதிரான குரலாக எடுத்துக் கொள்ள வேண்டுமோ, அதேபோல, ஜல்லிக்கட்டு ஜாதிய வன்முறைகளுக்கு எதிரான பரப்புரைகளையும் , ஜல்லிக்கட்டு தீண்டாமைகளுக்கு எதிரான சமவாய்ப்பை வலியுறுத்தும் பரப்புரைகளையும், ஆதிக்கத்துக்கு எதிரான குரலாக எடுத்துக் கொள்ளலாமே தவிர, இவற்றை ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான குரலாக எடுத்துக் கொள்ள முடியாது. இந்த ஆண்டு நடைபெற்ற மதுரை ஜல்லிக்கட்டு போட்டிகளில், ஜாதிப் பெயர் ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட மாட்டாது என்கின்ற தமிழ்நாடு அரசின் உத்தரவு வரவேற்கத்தக்கது. மக்களுக்காக போராட்டக் களத்தில் பாசிச சக்திகளை விவேகத்துடன் எதிர்த்து நின்றால், அது “வீரம்”; சுய கவுரவத்திற்காக மாட்டுடன் மல்லுக்கட்டுவது “முதிர்ச்சியற்ற மனோபாவம்” என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# சுங்கச் சாவடிகளை வைத்து பகல் கொள்ளை

“மராட்டிய மாநிலத்தில் மும்பையுடன் நவி மும்பையை இணைக்கும் அடல் சேது பாலத்தை இம்மாதத் தொடக்கத்தில் (ஜன.12) பிரதமர் மோடி திறந்துவைத்தார். 22 கிமீ நீளம் கொண்ட இப்பாலம் சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவுக்கு கடல் மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தேதியில் இந்தியாவில் மிக நீண்ட கடல் பாலம் இதுதான்” என்றெல்லாம் செய்தி வெளியிட்ட ஊடகங்கள் இன்னொரு செய்தியைக் குறிப்பிட மறந்துவிட்டன. இந்த 22 கிமீ நீள பாதையில் பயணிக்க சுங்கக் கட்டணம் 250 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இனி நாடு முழுக்க எல்லா சுங்கச் சாவடிகளிலும் கட்டணம் இப்படித்தான் தாறு மாறாக இருக்கப் போகிறது என்பதுதான் கடந்த 9 ஆண்டுகால ஆட்சி உணர்த்துகிறது.

2014-15 நிதியாண்டில் மோடி ஆட்சிக்கு வந்தபோது இந்தியாவில் இருந்த சுங்கச்சாவடிகளின் எண்ணிக்கை 145. ஆனால் அதை படிப்படியாக உயர்த்தி தற்போது 959-ஆக அதிகரித்திருக்கிறது ஒன்றிய அரசு. அதிலும் குறிப்பாக கொரோனா பேரிடருக்குப் பிறகு மட்டும் 650-க்கும் அதிகமான சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நெடுஞ்சாலைகளின் நீளம் 18,807 கிலோ மீட்டரில் இருந்து 38,315 கிலோ மீட்டராக மட்டுமே அதிகரித்துள்ளது. நெடுஞ்சாலைகள் ஒரு மடங்கு அதிகரித்தால், சுங்கச்சாவடிகள் எண்ணிக்கையோ 6 மடங்குக்கு மேல் அதிகரித்துவிட்டது.

சுங்கச்சாவடிகள் மூலமான வருவாயும் 17,759 கோடி ரூபாயில் இருந்து 48,028 கோடி ரூபாயாக பெருகியிருக்கிறது. 2030ஆம் ஆண்டுக்குள் சுங்கச்சாவடிகள் மூலமான வருவாயை 1.3 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்த இலக்கு நிர்ணயித்திருக்கிறார் ஒன்றிய சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி. ஆண்டுக்கு 15% வருவாய் உயர்வை எட்டினால் மட்டுமே இது சாத்தியமாகும். அதற்கு சுங்கக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது சுங்கச்சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். ஆனால் நரேந்திர மோடி அரசோ இரண்டையும் செய்து கொண்டிருக்கிறது.

சுங்கச்சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, வருவாயைப் பெருக்குகிற இதன் பின்னணிதான் பெரும் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது. 2021-22 நிதியாண்டில் இருந்து 2024-25 நிதியாண்டுக்குள் “தேசிய பணமாக்கல் திட்டத்தில் ( national monetization pipeline)” 6 லட்சம் கோடி ரூபாய் வருவாய் ஈட்ட திட்டம் வகுத்திருக்கிறது ஒன்றிய அரசு. இதில் நெடுஞ்சாலைகள் மூலமாக மட்டுமே 27% வருவாயை ஈட்டிவிடலாம் என்று ஆலோசனை கொடுத்திருக்கிறது நிதி ஆயோக். அதாவது நெடுஞ்சாலைகளை தனியாருக்கு தாரைவார்ப்பதை வேகப்படுத்தி, அதன்மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டுவதுதான் இதன் நோக்கம். 2025-ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் சுமார் 27,000 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலைகள் தனியாருக்கு தாரைவார்க்கப்பட உள்ளன. இதன்மூலம் ஒன்றிய அரசு ஈட்ட மதிப்பிட்டிருக்கும் தொகை 53,366 கோடி ரூபாய்.

நாட்டின் மூன்றில் இரண்டு பங்கு நெடுஞ்சாலைகள் தனியார் வசம் போகும் பேராபத்து இன்னும் சில வருடங்களில் ஏற்படப்போகிறது. பெட்ரோல் விலையை தனியார் நிர்ணயிப்பதைப் போல, சுங்கக் கட்டணத்தையும் தனியாரே நிர்ணயிப்பார்களே ஆனால் லாஜிஸ்டிக் கட்டணங்கள் பெருமளவு அதிகரித்து அனைத்து பொருட்கள், உணவுகளின் விலையும் ஏற்றம் காணும். இன்னொருபக்கம் ரயில்களையும் தனியாருக்கு கூறுபோட்டு விற்கும் வேலையை ஒன்றிய அரசு தொடங்கிவிட்டது. விமானச் சேவைகளில் அரசின் வசம் ஒரு நிறுவனம் கூட இல்லை. விமான நிலையங்களையும் ஒவ்வொன்றாக அதானி வாங்கிக் கொண்டிருக்கிறார். மிச்சமிருப்பது சாலைப் போக்குவரத்து ஒன்றுதான்... அதற்கும் 9 ஆண்டுகளாக சத்தமில்லாமல் வேட்டுவைத்துக் கொண்டிருக்கிறது நரேந்திர மோடி அரசு.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 27, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran